1972 ஆகஸ்ட் 10]

திரு. எம். சுரேந்திரன் : சார், மேட்டூர் பகுதி மிகுந்த தொழிலாளர்கள் வாழும் பகுதி. அங்கே இதுபோன்ற மருத்துவமனை அமைப்பதற்கு நிலம்கூடப் பார்த்து ஏற்பாடுகள் செய்யப்பட்டு கைவிடப்பட்டிருக்கிறது. அது மீண்டும் ஆலோசிக்கப்படும் என்று ஒரு சந்தர்ப்பத்தில் அரசாங்கத்தில் கூறினார்கள். இப்பொழுதே அரசாங்கம் இந்தப் பிரச்னையை எடுத்து அதை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : கனம் அங்கத்தினர் அவர்களின் யோசனையையும் நினைவில் வைத்து ஆவன செய்யப்படும்.

* 37. வினா—**திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1971 ஏப்ரல் முதல் தேதியில் தொழிலாளர் அரசினர் ஈட்டுறுதி செய்தோரின் உள்ளிருப்பு சிகிச்சைக்காக உள்ள தனியார் மருத்துவ மனைகள் எவை ?

(இ) இவற்றிற்கு அரசு தரும் உதவித் தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : (அ) நான்கு.

(1) ராமலிங்கம் என்புருக்கி மருத்துவமனை, பெருந்துறை.

(2) ராஜாஜி என்புருக்கி மருத்துவமனை, திருச்சிராப்பள்ளி.

(3) ஸ்கட்டர் நினைவு மருத்துவமனை, ராணிப்பேட்டை.

(4) கிறிஸ்துவ மிஷன் மருத்துவமனை, மதுரை.

(இ) இவற்றிற்கு அரசு தரும் உதவித்தொகை பின்வருமாறு :

(1) ராமலிங்கம் என்புருக்கி மருத்துவமனை, பெருந்துறை—பிணியாளர் ஒருவருக்கு 1 நாளுக்கு ரூ. 6 தரப்படுகிறது.

(2) ராஜாஜி என்புருக்கி மருத்துவமனை, திருச்சிராப்பள்ளி—பிணியாளர் ஒருவருக்கு 1 மாதத்திற்கு ரூ. 180 தரப்படுகிறது.

(3) ஸ்கட்டர் நினைவு மருத்துவமனை, ராணிப்பேட்டை—பிணியாளர் ஒருவருக்கு 1 நாளுக்கு ரூ. 7 தரப்படுகிறது.

(4) கிறிஸ்துவ மிஷன் மருத்துவமனை, மதுரை—பிணியாளர் ஒருவருக்கு 1 நாளுக்கு ரூ. 7 தரப்படுகிறது.

திரு. சு. துரைசாமி : தலைவரவர்களே, 4 மருத்துவமனைகளுக்கும் கொடுக்கப்படும் உதவித் தொகையில் வேறுபாடு இருக்கிறது. இந்த வேறுபாட்டைப் போக்க அரசாங்கம் முயற்சியெடுக்குமா ? அங்கேயிருக்கும் தொழிலாளர்களுக்குப் போதிய வசதிகளைச் செய்து கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: தலைவரவர்களே, மத்திய சர்க்காரிடத்தில் இதற்காகக் கடிதப் போக்குவரத்து நடத்தியிருப்பதால் அவர்களின் மூலம் நிதி உதவி கிடைத்தவுடன் உறுப்பினரின் எண்ணங்கள் நிறைவேற்ற முயற்சிக்கப்படும்.

Fish sales centres

* 38 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(*a*) whether it is a fact that a fish sales counter has been opened by the Government at Teynampet, Mount Road, Madras; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) ஆம்.

(இ) தேனாம்பேட்டை நிர்வாக அலுவலகக் கட்டிடங்களின் எல்லைக்குள் எர்ணாகுளத்திலுள்ள இந்திய-நார்வே திட்டத்தின் கீழ் (இந்திய அரசு) ஒரு பதனப்படுத்தப்பட்ட மீன் விற்பனை நிலையம் திறக்கப்பட்டுள்ளது. மேலே குறிப்பிட்ட மீன் விற்பனை நிலையத்திற்கு மீனளத்துறையினரால் ஒரு தற்காலிகக் கட்டிடம் கொடுக்கப்பட்டுள்ளது. அதற்குத் தேவையான சாதனங்களையும் பணியாளர்களையும் இந்திய-நார்வே திட்டத்தினர் அளித்துள்ளனர்.

THIRU N. DENNIS : Sir, may I know from the Hon. Minister whether there is export by package through this counter?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: இந்த நிலையத்தின் மூலமாக வெளிநாடுகளுக்கு அனுப்புகின்ற முறை இருக்கவில்லை.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, சென்னை நகரத்தில் நல்ல தரமான மீன் ஒரு கிலோ 5 ரூபாய்க்குக் கிடைக்கிறது. ஆனால் தாராளமாக மீன் உற்பத்தியாகின்ற நெல்லை, குமரி போன்ற மாவட்டங்களில் ஒரு கிலோ 10 ரூபாய்க்குக் கூடக் கிடைப்பதில்லை. ஆகவே, அந்த ஜில்லாக்களில் அரசாங்கம் கொள்முதல் செய்து விநியோகிப்பதற்கு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: இது எர்ணாகுளத்திலுள்ள இந்திய-நார்வே திட்டத்தின் மூலம் தேனாம்பேட்டையில் பதனப்படுத்தப்பட்ட மீன் விற்கும் நிலையம் ஆகும். உறுப்பினர் அவர்கள் கூறிய நெல்லைக்கு மண்டபத்தில் இருக்கும் மீன் தனியார் துறை மூலமாகவும், வேறு இதேபோன்ற குளிர் பதனப்படுத்திவைக்கும் முறையில் நமது மாநிலத்தில் மண்டபத்தில் விற்கப்படுகிறது.